ஞாயிறு வெளியீடு | ஆண்டுச் சந்தா நபர் 5 தனிப் பிரதி 0—1—3 | இலங்கை 10 சதம் மலாய் நாடு 8 காசு | REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 8—9—46 | இதழ் 19

## ★ முகம் வெளுத்தது! ★

"அம்மா!........அம்மா!........"

"என்னடா இது உசிரைவாங்கித் தொலைக்கிறாய். போய்த் தொலையேன் பள்ளிக்கூடத்துக்கு"

"பள்ளிக்கூடம் போகத்தான்............"

"அக்காவைக் கூப்பிட்டுச் சகுனம் பார்க்கச்சொல்லு. எனக்கு வேலை..........."

"சகுனம் பார்க்க அல்ல அம்மா! எனக்கு 'சில்க்' சொக்காய் வேண்டும்"

"'சில்க்' சொக்காயா! ஆக்மடா அப்பா. உன் அப்பா குபேரன், ஒருசொக்காயென்ன, ஒன்பது தைத்துக் கொடுப்பார், போ".

"வேலாயுதம் இல்லெம்மா, .டி வீட்டிலே, அவன்போட்டுக்கொண்டிருக்கிற மாதிரி............"

"அதுமாதிரி சொக்காபோட வேணும்னு, அவனுடைய அப்பாவுக்குத் தெரிந்ததுபோல, ஊரை ஏமாற்றத் தெரியவேணும் உங்க அப்பாவுக்கு."

"அழகாக இருக்கம்மா........"

"எது? சொக்காதானே! அவன் கிடக்கிறான் கரிக்கட்டை போல. உனக்கென்னடா கண்ணு! ராஜாபோல இருக்கிறாயடா"

"போம்மா. ராஜா, இந்த மாதிரி ஒட்டுப்போட்ட சொக்காதான் போடணுமா? கேலி செய்கிறான்கள்"

"கேலியா! யாரவன் கேலி செய்தவன், அந்த வாலு வேலாயுதமா? அவனுக்குச் சொல்லு, ஆமாண்டாப்பா! எங்க அப்பாவுக்கும், எங்கேயாவது மூண்டச்சி சொத்து கிடைத்தா, நானும் சில்க்காபோடுவேன்னு. கேலியா பேசுது அந்தக் குரங்கு!"

"மூண்டச்சி சொத்துன்னு..........?"

"கண்ணு! வேலாயுதம் அம்மா இருக்கறாளே, அவதாலி அறுத்துவிட்டு, பிறகு ஒருவனோடு ஓடிவந்துவிட்டவ, சொத்து இருந்தது. அந்தப்பணத்துக்காக, அவளைக் கலியாணமும் செய்து கொண்டான் அந்த ஜாதி கெட்டவன். அவங்க மகன் இந்த வேலு. அவங்களிடம் பணம் இருக்கு. இருந்து? ஜாதியிலேயிருந்து அதுகளைத் தள்ளிவிட்டாங்க தெரியுமா?"

"தள்ளிவிட்டதாலே அவங்களுக்கு ஒண்ணும் குறையே காணோமேம்மா"

"உனக்குத தெரியாதுடா ராஜா! நம்ம வீடுகளிலே எதாவது கலியாணம்கார்சிநடந்தா, அவர்களைக் கூப்பிடமாட்டோம், தெரியுமா? அவர்கள் வீட்டிலே, நாம்பபோய் தண்ணிகூடச் சாப்பிடக்கூடாது, தெரியுமா."

"அவங்க வீட்டுப் பலகாரம் கூடத் தின்ன..........."

"ஏண்டா, சனியனே! அந்தப் பயல் எதாவதுபலகாரம்கொடுத்தானு உனக்கு"

"அவனு கொடுக்கிறவன்! அம்மா! நான் கேட்டுக்கேட்டுப் பார்த்தேன், கொடுக்கவேயில்லை..........."

"அவன் கொடுக்காததேநல்லதாப் போச்சி"

"போம்மா! நான் விட்டேனு! கையிலேயிருந்து தட்டிவிட்டேன்; கீழேவிழுந்தது. 'லபக்'னு வாலே போட்டுக்கிட்டேன்"

"..ரா! கர்மம்! கர்மம்! ..ண்டா இப்படி அனுச்சாரம் செய்கிறே! அந்தப் பீடைகள் வீட்டிலே செய்ததைத் தின்னு நம்ம குலத்துக்கும் கௌரவத்துக்கும் ஆகுமாடா? நம்ம உறமுறை யார் காதிலே கேட்டா.........."

"என்னு சொல்வாங்களோ எனக்குத் தெரியாதம்மா! ஆனு அந்தப் பலகாரத்தைச் சாப்பிட்டுப் பார்த்தா, விடவே மாட்டாங்க"

"சரி! சரி! சாப்பாட்டு ராமனுயிடாதே. இனிமே அப்படி எல்லாம் செய்யாதே. இதோ பார், நாம்பள்ளாம் ஒசத்திஜாதி-சைவ மொதலியாருங்க நாம்ப-வேலாயுதம் இருக்கிறான்பாரு. அவங்க மட்டஜாதி — அவங்க தோட்டதை நாம்ப சாப்பிடக் கூடாது"

●

சகுனம்
குபேரன்
முண்டச்சி
ஓடிவந்துவிட்டவள்
ஜாதி கெட்டவன்
சனியன்
கர்மம்
அனுச்சாரம்
பீடை
குலம்
கௌரவம்
ஒசத்தி ஜாதி
மட்ட ஜாதி

இவ்வளவு "பாடங்களை" (பள்ளிக்கூடத்தில் அல்ல) வீட்டிலேயே சொல்லி வைக்கிறார்கள், தாயார். இந்தமகன், பிறகு பள்ளிக்கூடத்தில்,

சகுனம் பார்ப்பது அவசியமற்றது அர்த்தமில்லாதது—
ஜாதிபேதம் கூடாது
விதவா விவாகம் நல்ல சீர்திருத்தம்
எல்லோரும் ஒரே குலம்
சகோதரர்போல் வாழ வேண்டும்

என்ற 'பாடங்களை'ப் படிக்க வேண்டும். வீட்டுப் பாடமும், பள்ளிக்கூடப் பாடமும் இம்முறையில்சேரும்போது, 'மாணவனின்' மனம் குழப்பமடையுமா, தெளிவு பிறக்குமா, என்பதை எண்ணிப் பாருங்கள். சருக்கு நிலத்திலே நடத்தும் ஓட்டப் பந்தயம்போல அவன் திண்டாடவேண்டும்.

●

அங்கே வேலாயுதம் வீட்டிலே பார்ப்போம்.

"டே! வேலு! என்னடா இது வேலைக்கு இரண்டுமைசூர்பாகு எடுத்துக்கொண்டு போகிறாய் பள்ளிக்கூடத்துக்கு"

"சரி, சரி. அம்மாகிட சௌபாக்யம்! குழந்தைக்கு இல்லாமல் வேறு யாருக்காம், மைசூர் பாகு!"

"அதுக்கில்லிங்க. மைசூர் பாகுன்னுகூட, அவ்வளவு வேண்டாமா? வயித்துவலிவரும். டாக்டர்கூடச் சொல்லி இருக்கிறார், தித்திப்புத் தின்றால் வயிறுவலிக்கும்னு"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. இராத்திரி படுக்கபோகும் போது, பால் ஒரு ஆழாக்கு கொடு. எல்லாம் சரியாகிவிடும். பாலுக்குள்ள குணம், அந்த டாக்டர் தருகிற மருந்துக்கு ஏது?"

"டே! வேலு! அப்பாவும் உன்னோடுசேர்ந்துகொண்டார், இனி வேலைக்கு அரைடஜன் எடுத்துத் தின்னு"

"போம்மா! நானே தான் தின்றவிடறனு இரண்டு மைசூர் பாகையும்"

"ஏன்! நீ தின்னுமே; தானம் செய்யறியா!"

"இல்லேம்மா. கோடிவீட்டுப் பையன் இல்லே, சிவப்பு மூஞ்சி, சிங்காரம், அவன்............"

"அவனுக்கென்னடா, மைசூர் பாகு கேட்குதாமா! ஆமாம், அவன்என்னசெய்வான்! பெரிய பிரபு, அவங்க அப்பன்............"

"யார் அந்தச் சிங்காரம்? மளிகைக் கடையிலே கணக்கு எழுதற மகாதேவமுதலிபிள்ளையா!"

"ஆமான்னு! அது கெட்ட கேட்டுக்கு, மைசூர் பாகு ஒண்ணுதான்குறைவு. அதுக்குக் கொடுக்குதாம், வேலு"

"இல்லேம்மா! நான் கொடுக்கலேம்மா. அவன் பிடுங்கிக் கிட்டான்"

"பார்த்திங்களா! அக்ரமத்தைக் கேட்டிங்களா? தரித்திரம், தறுதலை ஆட்டம்ஆடுது. தட்டிப் பறிக்குதாமே பலகாரத்தை"

"என்னமோ விடு, போ, ..னப்பய.........."

"சின்னப்பயலா! ..ன் இருக்கும் உங்கபிள்ளையா.."

(அடுத்த பக்கம் பா..

## முகம் வெளுத்தது

1-ம் பக்கத் தொடர்ச்சி

னஞ்சிறுசிலேயே,இந்தத்திருட்டுப்புத்தி இருந்தா பெரிசானதும் ஊர்க்கொள்ளை அடிக்கும். பாருங்கோ, நீங்க என்னமோ ஏழை, ஐயோபாவம்னு சொல்லிங்க; நான் சொல்றேன் கேளுங்க, இதுங்களுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தாக்கூட, தலைமேலே ஏறிக்கொள்ளும். எப்படி அதுங்களுக்கு நல்லபுத்தி நடத்தை எல்லாம் வரும். டே, வேலு! நீஎதுக்காக அந்தத் தலைகாஞ்சதை கூடச் சேர்ந்தே. ஏண்டா! உனக்கு ஏண்டா, அதுகசினேகிதம்.அவனுங்களெல்லாம் கஞ்சிக்கு அலையறதுங்க; உன்னை அது இது கிடைக்கும்னு நினைச்சித்தானே சினேகம் பிடிக்குதுங்க."

"நல்லப்பையன்தாம்மா, சிங்காரம்..........."

"என்ன நல்லவன்! நம்ம அந்தஸ்துஎன்னயோக்யதைஎன்ன; பள்ளிக்கூடத்திலே அவன்கூட உட்கார்ந்து படிக்கறதாலேயே எல்லோரும் ஒண்ணுயிட முடியுமா! அந்தப்பையன் அப்பாவுக்கு என்னவேலை தெரியுமா? ஒருகடையிலே குமாஸ்தா. அந்தப்பையன்கூடச் சரிசமமாச் சேர்ந்து சுத்தக்கூடாது...."

"இல்லேம்மா"

"யாரானு பார்த்தா, இது என்ன வேலாயுதம் போயிஇந்த வெடிவெட்டிப்பய சிங்காரம் கூடச் சேர்ந்துகிட்டுச் சுத்தருனேன்னு கேலியாப் பேசும். இனிமேலே சேராதே."

"சரிம்மா"

●

இங்கே, வேலாயுதம், தன் குடும்பத்திலே, தாயார் மூலம் பெற்ற பாடம், பணக்காரத் தன்மை, ஏழையின் தன்மை, இருவருக்கும் உள்ள ஏற்றத் தாழ்வு; செல்வம் படைத்தவன், ஏழையிடம் சரிசமமாகப் பழகக்கூடாது, அது கௌரவக் குறைவு, என்பன. வீட்டிலே இந்தப்பாடம் படித்து விட்டுப் போகும் வேலாயுதம், பிறகுபள்ளிக்கூடத்திலே, படிக்கப்போகிருன்,

செல்வம் நிலைக்காது
ஏழை அழுதகண்ணீர்
ஏழைஎன்று இகழாதே

என்ற பழமொழிகளையும் ஏழ்மை பிரபுத்துவம் என்றஇரு பெரிய பேதமேஉலகைக்கெடுக்கிறது என்ற உண்மையையும், செல்வவான், ஏழையின் [illegible]த்தை எய்த்துப் பெற்ருன் என்ற பொருளாதாரப் பாடத்தையும்,ஏழைபணக்காரன்என்ற பேதத்தின் விளைவே, பெரிய பெரிய புரட்சி என்ற சரித்திர சம்பவங்களையும். வீட்டுப் பாடம், அவனுக்கு செறித்த [illegible]வும், கர்வப்பேச்சு, செருக்[illegible]னபார்வை, இவைகளைக் கற்[illegible] கொடுக்கிறது.பள்ளிக்கூட போதனையோ, வேறு! இந்தநிலையில் வளரவேண்டும் வேலாயுதத்தின் மனம். எப்படி அந்தமன வளர்ச்சி வளமாக இருக்கமுடியும்! பள்ளிக் கூடத்திலேஎன்ன நடக்கிறது? பாடம் எல்லோருக்கும் ஒரே விதந்தான்; ஒரே அளவுதான். ஏழைக்கு ஒரு பாடம், பணக்காரனுக்கு மற்ருேர்பாடம் என்று இல்லை. ஆனால் போதிக்கும்போது ஆசிரியர் கையாளும் முறை, உபயோகிக்கும் ஆயுதம், பிரயோகிக்கும் பதங்கள், முகபாவம், இவைகளிலே நிச்சயமாக மாறுதலைக்காணலாம்.கொஞ்சநேரம், வகுப்பிலே நுழைந்து தான் பார்ப்போம்.

●

"ஆப்பிரிக்காவிலே இருக்கும் ஜனங்களின்பெயர் என்ன?"

"நீக்ரோக்கள், சார்!"

"உட்கார் வேல்! டே! சிங்காரம்! நீக்ரோக்களின் நிறம் என்ன?"

"கருப்பு சார்"

"சரி! உட்கார்.டே! முனியா, ஆப்பிரிக்காவில் என்னென்ன நதிகள் உள்ளன!"

ஆசிரியரின் இந்தக்கேள்விக்கு முனியன் பதில் கூறுமுன் ஒரு அழுகுரல் கேட்கிறது. வேலாயுதம் அழுகிருன். வகுப்பிலே கலகலப்பு ஏற்படுகிறது. ஆப்பிரிக்க நதியை ஆசிரியர் மறந்தே விடுகிருர்.

"வேலு! வேல்! ஏன் அழுகிருய்?"

"ஒண்ணுமில்லே சார்!"

"ஒன்றுமில்லாததற்கு ஏன் அழணும்? டே! சிங்காரம், நீ ஏதாவது சேஷ்டை செய்தாயா?"

"இல்லே சார்!"

"சீ! கழுதே! வரவர நீரொம்பக்கெட்டு விட்டாய். ஏறுபெஞ்சிலே"

"ஏன் சார்"

"ஏறுடான்னு.......தறுதலை.... தரித்திரம்........போய் உங்கஅப்பன் இருக்கிற கடையிலே மூட்டை தூக்குவதுதானே...... எப்படி இருக்கிருன்பார், பீமன் மாதிரி............"

"நான் என்னதப்புச் செய்தேன்சார்"

"நீலிக்கண்ணீர். நில்லு பெஞ்சிமேலே. ஏன், வேலாயுதம் அழுதான்?"

"எனக்கு என்ன தெரியும். அவனைக் கேட்டாத்தானே"

"சார்! என்னை நீக்ரோன்னு கேலி செய்தான் சார், சிங்காரம்"

"பார்த்தயா! எனக்குத்தெரியுமே அப்போதே. வாலாச்சே நீ, நீஏதாவது சேஷ்டை செய்யாமல், அவன் அழமாட்டானே."

"பொய் பேசருன்சார்வேலாயுதம்"

"அடடா! இவர் அரிச்சந்திரன். டே! முனியா! அவன்தலையிலே மூணு குட்டு குட்டுடா..... டே, டே! சிங்காரம் தலையிலே ........ஆ........போதும் உட்கார். இனிமே, நீக்ரோன்னு சொல்ல மாட்டயே வேலுவை"

"நான் இப்பகூடச் சொன்னேனுன்னு கேளுங்க."

"வாயாலே சொல்லலே சார்! நீங்க கேள்வி கேட்டிங்க இல்ல, நீக்ரோ என்ன நிறம்னு, அப்ப இவன் என்னைப்பார்த்துச் சிரித்தான் சார். உடனே, எல்லாப் பசங்களும் என்னைக் கேலியாப் பார்த்தாங்க சார்."

"பார்த்தயா, ராஸ்கல்!நீகுறும்புக்காரனுச்சே! டே! சிங்காரம்! ரொம்பச்சிகப்பாச்சே, நாம்ப தான் அழகுன்னு எண்ணமோ உனக்கு? தடிப்பயலே! குரங்கு முகம்கூடச் சிகப்புத்தாண்டா. கருப்புநிறம்னு கேலியா! சாட்சாத்கண்ணபிரான் கருப்பு."

வகுப்பு முடிந்தது. சிங்காரத்தை ஆசிரியர் தனியாகச் சந்திக்க நேரிடுகிறது. அப்போது அவனுக்கு இதோபதேசமும் செய்கிருர் ஆசிரியர். என்னவென்று?

"டே! இங்கேவாடா!ஏண்டா நீகொஞ்சம் புத்திசாலித்தனமா படிக்கக்கொள்ள இருக்கறவனுச்சே,உனக்கு ஏண்டா வீண் வம்பு. ஏண்டா! வேலாயுதம், யாருதெரியுமேல்லோ. அவங்க அப்பன் பெரியபணக்காரன், அதிகாரத்திலே இருக்கிருன்; இந்தப்பள்ளிக்கூட டிரஸ்டிகூட அவன். அவன் பிள்ளையைப் போய் நீநீக்ரோன்னு கேலி செய்யலாமாடா. ஏண்டா! அவன் நீக்ரோவாட்டம்கருப்பா இருந்தாலும், அவனிடம் நிறையப்பணம் இருக்கேடா. நீஇருக்கிறே, டிராமாவிலே வருகிற ராஜபார்ட்மாதிரி.என்னபிரயோஜனம்?உன் அப்பன்கஷ்டஜீவனந்தானே. அரைச்சம்பளந்தானே கட்டுகிறே. அடக்கஒடுக்கமா இருக்கணுமேடா, இல்லையானு அரைச்சம்பளத்திலே மண் விழுமே. பிறகு நீ எங்கேயாவது போய்க்கடையிலே காவல் காக்கவேண்டியது தானே. அவன் அப்படியா,படிப்புவந்தாலும்வராவிட்டாலும், இரண்டும் ஒன்றுதான் அவனுக்கு. ஆஸ்தி இருக்கு, அதிகாரம் இருக்கு. படித்து, வேலைக்குப் போய்த்தான் பிழைக்கவேணும் என்கிற கதி உண்டா அவனுக்கு. உன் எழுத்து அது. நீபோய், அந்தப் பயலைச்சீண்டிவிட்டா, அது அவன் அப்பனிடம்போய்க்கலக மூட்டும். பிறகு, அவன் இங்கே வந்து குதிப்பான். எட்மாஸ்டரோ, அவன் எள் என்பதற்குள்ளேஎண்ணெயாகிவிடுவார். உன் அரைச்சம்பளம் போகும். பாவம்! உன் அப்பன் எவ்வளவோ கஷ்டத்திலே படிக்க வைக்கிருன் உன்னை. ஏழையாச்சேடா நீ. அவன் பணக்காரனுச்சே. அவனிடம் ஜாக்ரதையாக நடந்துகொள்ள வேண்டாமோ. போ! போ! இனிமேல் அப்படி எல்லாம் செய்யாதே. பிழைக்கிற வழியைப்பாருடா, பிஞ்சில் பழுத்துப்போகாதே"

ஏழை, பணக்காரனிடம் பணிந்துபோகவேண்டும்! இது வகுப்புக்கு வெளியே ஆசிரியர் போதிக்கும் பாடம். வகுப்பிலே அவர் போதித்தது வேறு. ஒரு பாடம்,பணக்காரர்கள்பாவிகள் என்றுகூட இருந்தது. பணம் படைத்தவர்கள், கண்இருந்தும் குருடராய், வாயிருந்தும் ஊமையராய், காது இருந்தும் செவிடராய் உள்ளனர் என்று அழகழகாக எடுத்துச்சொன்னர்,ஏதோ ஒரு புஸ்தகத்திலிருந்து. அதே ஆசிரியர் பிழைக்கும்வழியைக் கற்றுக்கொடுக்கிருர் வகுப்புக்கு வெளியே! இந்தஇரண்டு பாடங்களிலே, எதை ஏற்றுக்[illegible]வான் சிங்காரம்?

●

விளையாட்டு மைதானத்திலே சந்தித்தனர், வேலாயுதமும் சிங்காரமும். வேலாயுதம், மைசூர் பாகுத் தின்ருன்; சிங்காரம் நாக்கில் ஊறிய உமிழ்நீரை உள்ளுக்குக்கொண்டுபோகாமல், கீழே "உமிழ" வேண்டி இருந்தது.

"ஏண்டா! என்னைப்பார்த்துக் காரிஉமிழ்கிருய்?" என்று அதிகாரத்தொனியில் கேட்டான் வேலாயுதம்.

மீண்டும் ஒருமுறை கீழே எச்சிலைஉமிழ்ந்து விட்டுச்சிங்காரம் சொன்னன்,"எச்சிலைஉமிழ்வதற்குக்கூடஉன்னைக்கேட்டுஉத்தரவு வாங்கிக் கொண்டாகவேண்டுமா"என்று.

"எந்த நாய் என்னை என்ன செய்யமுடியும்"

"எந்தக்கழுதையாலும் எனக்கென்ன! அதன்முதுகிலே மூட்டைமூட்டையாகப் பணம்இருந்தால்கூட எனக்கென்ன"

"யாரடா கழுதை?"

"நாய் யார்?'!

"வெடிவெட்டிப்பயலே!"

"போடா, மட்டஜாதிப் பயலே"

"மூட்டை தூக்கி மகன்தானேடா நீ"

"முண்டச்சிபிள்ளைதானேடா நீ',

சார்! சார்!— என்று அலறினன் வேலாயுதம். தேகப்பயிற்சி ஆசிரியர்வந்தார், "என்னடா!" என்று மிரட்டியபடி. "சார்! என்னைத்திட்டினன் சார்?"

"யார்?"

"சிங்காரம், சார்"

"என்ன திட்டினன்?"

"முண்டச்சிபிள்ளைன்னு......."

"யார்? உன்னையா?"

அவ்வளவுதான் விசாரணை. தண்டனை வெகு ஜரூராகஆரம்பமாகிவிட்டது — சிங்காரத்தின் முதுகும் சிவந்தது;முகமும் கண்களும்சிவந்தன. அந்தச் சிவப்பு மாறவே இல்லை! சிங்காரம் B.A. வானன்மாறவில்லை! தேர்தலிலே வேலாயுதத்தோடு போட்டியிட்டுத்தோற்ருன், மாறவில்லை. வேலாயுதம் தயாரித்த குற்றச்சாட்டினல், சிறைத் தண்டனை பெற்ருன்,மாறவில்லை. வெளியே வந்தான், விடுதலைபெற்று. ஒரு பொதுக்கூட்டத்தில்வேலாயுதம் "சமதர்ம"ப் பிரச்சாரம் செய்தான். அதைக்கேட்டதும், சிங்காரத்தின் முகம் வெளுத்துவிட்டது,பயத்தால்!சமதர்மத்துக்கு, இப்படிப்பட்ட பிரசாரகன் ஏற்பட்டுவிட்டானே, இனி எப்படி அந்த இலட்சியம் ஓங்கிவளர முடியும், என்ற பயத்தால், சிங்காரத்தின் முகம் வெளுத்துவிட்டது.

# "பெரியார் நகர்"

—(o)—

"பார்ப்பனியம் ஒழிந்தாலொழிய பாமரன் பாராளும் காலம் பிறவாது. பார்ப்பனியம் என்றால், பார்ப்பனர்கையாளும் முறைகள் என்றல்ல பொருள்—ஒன்று பார்ப்பனரைமட்டும் ...க்கிறோம் என்பதல்ல ...ந்த்து— பார்ப்பனரல்லாதாரில் சிலரிடம், பார்ப்பனியம பார்ப்பனர் உள்ளத்தில் இருப்பதைவிட அதிகமாகக்கூட இருக்கக் காண்கிறேன்—அதையுஞ் சேர்த்துத்தான், பார்ப்பனியம் என்று கூறுகிறேன் — அதனையுந்தான் கண்டிக்கிறேன். அந்தப்பார்ப்பனியம் ஒழிந்தால்தான், நாம் விடுதலை பெற்றோம் என்று கூற முடியும்.

பிறநாடுகளிலேஎல்லாம், மனிதன் மனிதனை மனிதனாகக் கருதவும், நடத்தவும், கற்றுக்கொண்டான். இந்தவிசித்திரமான நாட்டிலேதான், இன்னமும்மனிதனை மனிதனாகமதிக்கவேண்டும்என்ற மதிபிறக்கவில்லை. பழங்காலமுதற்கொண்டே இந்தநிலையை மறுத்த ஒரு சதி நடைபெற்று வந்திருக்கிறது. பெரியார் இராமசாமி, இந்தச்சதியைக் கண்டித்தவர்.

பொழுது போக்குக்காகவோ புத்தறிவினைக்காட்டிக்கொள்ளவோ, மன்றங்களிலே, சமத்துவத்தைப்பற்றி, சமுகப்புத்தமைப்புமுறைபற்றிப்பலர் பேசி வந்தனர். ஆனால் இதனைப்பாமரனுக்கு, பொதுமக்கட்கு, எதிர்ப்புக்கு அஞ்சாது, இடையறுது உழைத்து எடுத்து உரைத்தவர் பெரியார். அவருடைய பெயரால் இங்கு ஓர் நகரம் நிர்மாணிக்கப்பட்டது மகிழ்ச்சிக்குரியது. இதனைத் திறந்துவைக்கும் பேறு எனக்குக்கிடைத்தது, கண்டுகளிக்கிறேன்; அதனை அளித்த தோழர் சண்முகம் அவர்கட்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

என்று சென்னை மேயரும், பழங்குடி மக்களின் தலைவருமான, தோழர் சிவராஜ், "பெரியார் இராமசாமி நகர்" திறப்பு விழா வாற்றுகையில் கூறினர்.

தாம்பரம் ரயிலடிக்கு எதிரே 390 ஏகர் அளவில், 'பெரியார் இராமசாமி நகர்' அமைந்திருக்கிறது. இரும்புலியூர், கடப்பேரி போன்ற சிற்றூர்களின் பகுதிகளின் தொகுப்பாக இந்நகர் அமைந்திருக்கிறது. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் தோழர் டி. சண்முகம் அவர்களின் பெருமுயற்சியால் இந்நகர் அமைக்கப்பட்டிருக்கிறது.

முறைப்படி, இதற்காக செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத்தில் ஏற்கனவேதீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாகாண சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு நகரநிர்மாணவேலையும், விழாவுக்கான காரியமும், நடைபெற்ற பிறகும், சிலபார்ப்பனர்கள் மந்திரியாரிடம் முறையிட்டு, இந்த 'நகர்' திறப்புவிழா நடைபெருதவாறு தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனராம! விழா வன்றுப, பள்ளிச்சிறுர்களைப் படைதிரட்டிவந்து,பக்கம் நின்று பலகூவிப்பார்த்தார் மற்றோர் தேசியத்தோழர். பிறகு அவராகவே சென்றுவிட்டார்.

விழா,சுமார்6-மணிக்கு,அலங்கரிக்கப்பட்ட பந்தலில் துவங்கியது. மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினர் பலரும், வேறுபிரமுகர்களும் மாணவர்களும் குழுமியிருந்தனர்.

தோழர் சண்முகம், தோழர் சிவராஜ்அவர்கட்கு ஒருவரவேற்புரை வாசித்தளித்தார். மேயர் சிவராஜ், பிறகு நகர்திறப்புவிழா வாற்றினர். அதுசமயம், பெரியாரின் பெருந்தொண்டு பற்றிப் பாராட்டிப் பேசினர். பிறகு தோழர்கள் அண்ணாத்துரை, அன்பழகன் ஆகியோர் பெரியாரின் பெருந்தொண்டினை விளக்கிப் பேசினர்.




பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இப்போது காங்கிரஸ் கட்சியைத்தலைமீது தூக்கிவைத்துக்கொண்டு கூத்தாடுகிறது.

காரணம் என்ன? காங்கிரசை ஆதரித்து இடைக்காலசர்க்காரை அமைப்பதன்மூலம், முஸ்லீம் லீகின் கோபத்தைக்கிளறலாம்; காங்கிரசும் லீகும் முன்னிலும் அதிகமாகவிரோதப்படும்; அந்த சமயத்தைத் தனக்குச் சாதகமாகப்பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதுதான்!

# "அமைதி" தந்திமூலம்!

—(oo)—

இடைக்கால சர்க்கார் அமைத்த பண்டித ஜவஹருக்கு வாழ்த்துத் தந்திகள் பல வந்தன; நமது மாகாண முதலமைச்சரும் ஒன்று அனுப்பினர். அதிலே, அவர் "சென்னை மாகாணத்தில் அமைதி நிலவுகிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

"அமைதி" தந்தி மூலம்! ஆனல் அன்றுட நடவடிக்கைக் குறிப்புகளைத் தொகுத்துப் பார்த்தாலோ, முற்றிலும் மாறுன நிலைமை, இங்கு இருப்பதைக் காணலாம். முதலமைச்சர் அதனைத் தெரிவிக்கவில்லை. முடியாதல்லவா! தந்திச் செய்தி என்றால் சுருக்கமாகத்தானே இருக்கும். விரிவு, தபால் மூலம் கிடைத்திருக்குமோ! பிரதமருக்கு நேரம் இராது. எனவே பிரதமர் பிரகாசம் சார்பில், நாம், தந்தி மூலம் கிடைத்த தகவலின் விளக்க, விவரத்தை இத்தபால் மூலம் பண்டிதருக்கு அனுப்புகிறோம். நமக்குள்ளே ஒளிப்ப என் என்பதற்காக உங்கட்கும் தபாலை அனுப்புகிறோம்.

அமைதி நிலவுகிறது! இது தந்திச் செய்தி. இதோ, தபால், காண்க.

செப்டம்பர் 1-ந் தேதி வாக்கால் பேட்டை, கெல்லிக்குப்பம் ரயில் பகுதியில், தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டு விட்டன.

டிரைவரும், பையர்மெனும் புதுவையில் அடிக்கப்பட்டனர். கேப் பர்குவாரி ரயில்வே ஸ்டேஷனில் ஒருபாயிண்ட்ஸ்மேன் அடிக்கப்பட்டு, விளக்கும் சாவியும் பறிக்கப்பட்டன.

மாயவரம் போலீசார், வாக்கால் பேட்டை ஸ்டேஷன் மாஸ்டரைக் கைது செய்தனர்.

சைதாப்பேட்டையில், கம்யூனிஸ்டு தோழர்கள் பேசக்கூடாது என்று 144-வது செக்ஷன்படி தடை உத்திரவு பிறப்பித்தாயிற்று.

கோடம்பாக்கம் ரயிலடியிலிருந்து தாம்பரம் வரையுள்ள பகுதியில், ரயில்வே ஸ்ட்ரைக்பற்றிப் பேசக்கூடாது, யாரும்; பதினைந்து நாட்களுக்கு 144.

ஊர்வலங்கள் போகக்கூடாது. 144-தான் அதற்கும்.

கன்னிக்கோட்டையில் வேலை நிறுத்தக்காரர்கள் மூன்று பேர் ஆகஸ்ட் 31-ந் தேதியே, கைது செய்யப்பட்டனர்.

அதே தேதியில், அதே கைங்கரியம் ஈரோடில், இங்கும் மூன்று பேர் கைது. திருநெல்வேலியில் செப்டம்பர் 2-ந் தேதி வேலை நிறுத்தக்காரர்கள் பத்துப் பேர் கைது செய்யப்பட்டனர்.

விழுப்பரத்தில் செப்டம்பர் 3-ந் தேதி 3 பேர், கோயில் பட்டியில் 15 பேர், முகையூர் ஸ்டேஷனருகே 3 பேர், கைது செய்யப்பட்டனர்.

திருச்சியில், கூட்டம் சேர்த்து வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு திரட்டவும், உண்டி வசூலிக்கவும் முயற்சித்த "தாய்மார்கள்" மீது வழக்குத் தொடரப்பட்டது.

இதேபோல, மேலும் சில தாய்மார்களும், பிறகு கைது செய்யப்பட்டனர், ஆக மொத்தம் 17 பேர் கைது. இவர்களுக்கு ஒரு வாரச் சிறைவாசம் விதிக்கப்பட்டது.

ஆல்வாய்நகரில் பத்து பேர் கைது செய்யப்பட்டனர்.

ஸ்டேஷன் மாஸ்டர் உட்பட 5 பேர் புதுக்கோட்டையில் கைது செய்யப்பட்டனர்.

சேலத்தில், செப்டம்பர் 2-ந் தேதி 11 வேலை நிறுத்தக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

திண்டுக்கல்லில் ஆகஸ்ட் 31-ந் தேதி 15 பேர் கைது செய்யப்பட்டு, தலா 8 நாள் சிறை வாசத் தண்டனை தரப்பட்டது.

செப்டம்பர் 5-ந் தேதியாகிய, வியாழக்கிழமை காலை 9 மணிக்குள் சுபமுகூர்த்தத்தில், பொன்மலை, தொழிற் சங்கத்தின் எதிரில், போலீசார், தடியடிப் பிரயோகம் செய்தனர். துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது.

நாலு பேர் இறந்து போயினர்; ஒன்பது பேருக்குக் காயம்.

சுமார் இருபது தொழிலாளர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

தடியடியினல் 100 பேருக்கு மேல் காயமுற்றனர். 4,000 தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். போலீசார்மீது கல் வீசினர். சோடா புட்டிகள் வீசப்பட்டன. போலீசார் தடியடி தந்தனர்.

400 தொழிலாளர்களுக்கு மேல் போலீஸ் காவலில் வைக்கப்பட்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 8—9—46 [ஞாயிறு

# புயலும் படகும்!

★

கடந்ததிங்கட்கிழமை, கராச்சி நகருக்கு வெளியே உள்ள ஆற்றிலே, அழகான சிறுபடகுகள் சில ஊர்ந்தபடி இருந்தன; அவற்றிலே பலர் அமர்ந்திருந்து ஆனந்தமாக உரையாடிக் கொண்டிருந்தனர். விழா! விருந்து! படகுகளில்! இவைகளைவிட முக்கியமான விஷயம் அந்த விழாவில் இந்து—முஸ்லீம் எனும் இரு இனத்தவரும் கலந்து கொண்டது. விருந்து அளித்தவர்கள் முஸ்லீம்கள், உண்டுகளித்து உரையாடினவர்கள் இந்துக்கள். ஈத்திருநாள் விருந்து இம்முறையில் கொண்டாடப்பட்டது. ஜாதி மதஒற்றுமையை நிலைநாட்ட இவ்விருந்தை நடத்தினர். அந்த மனப்பான்மை நல்லதோர் சூழ்நிலையை உண்டாக்குமானால், நாடு இன்றுள்ளது போன்ற நாசப் பிடியிலிருந்து விலகி, நல்வாழ்வு பெறமுடியும். ஆனால், பெருமூச்சுடன், சொல்ல வேண்டியிருக்கிறது உண்மையை, புயலும்படகும் என்ற தலைப்புக்கே, நாட்டு நிலை இன்று ஏற்றதாக இருக்கிறது.

ஆற்றிலே படகு செல்ல, அதிலே இந்துவும் முஸ்லீமும் கலந்து விருந்துண்ண இருக்கும் அதே நேரத்தில், பம்பாய் 'கல்கத்தா காய்ச்சல்' பிடித்தநகரமாகி கல்வீச்சும் கத்திக்குத்தும், குண்டும் கொள்ளையும் கூத்தாடும் இடமாகத் தோற்றமளிக்கிறது. எந்த ஈத்திருநாள் கொண்டாட்டமாக விருந்து, நடைபெறப்படகு சென்றதோ, அதே ஈத்திருநாள் வந்துபோனது பற்றிப் பத்திரிகைகள் தீட்டியதலைப்பைப் பார்த்தால், புயல்வந்தது, நல்லவேளை ஒன்றும் விபத்து இல்லை என்று கூறும் விதமாக இருந்தது. புயலும் படகும்! ஆம்! பம்பாயில் புயல்! கராச்சியில் படகு! பம்பாயில் வகுப்புக்கலகம்! கராச்சியில் வகுப்பு ஒற்றுமைக்கான விருந்து! இந்தநிலை நல்லதாகுமா? 'புயலும் படகும்' என்ற நிலையிலே, நாடு இருப்பதானல், காட்டு நிலையன்றிவேறென்னகாணமுடியும்?

படகுகளில் நடைபெற்றவிருந்து "வகுப்பு ஒற்றுமை"யை ஊட்டுவதாக அமைந்தது. உண்மை! உயர் மனப்போக்கின் அறிகுறி. பாராட்டுதலுக்குரியது. இந்த விருந்து நடைபெறும் நேரத்தில் வேறோர்பக்கம் புயல்வீசுவானேன்?

அந்தப்புயல்கிளம்பக்காரணம் என்ன? அதுவும் ஒரு விருந்தின் காரணமாகக் கிளம்பியது தான்! படகு விருந்து நடந்தது கராச்சியில், செப்டம்பர் 2-ல், திங்கள் என்று. மறுஇரவு புதுடில்லியில், விருந்தொன்றுநடைபெற்றது.

"மேன்மைதங்கிய வைசிராயுடன் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், தோழியர் விஜயலட்சுமி பண்டிட் அவர்களும் விருந்துண்டனர்."

இந்தவிருந்து, வைசிராயின் போக்குமாறி, அந்தப்போக்கு மாறினதால், பண்டிதரின்நிலையும் மாறினதன் அறிகுறி. பண்டித ஜவஹரை, பதினைந்து ஆண்டுகள் (பலதடவை சென்றதன் தொகுப்பு) சிறையில் அடைத்த ஏகாதிபத்யம் விருந்து அளித்தது, செவ்வாயன்று.

அந்த 'விருந்து,' வெள்ளையர் நாட்டைவிட்டுவெளியேறும் 'பிரிவு உபசார' விருந்தாக அமைந்திருந்து, விருந்திலே, ஜனாப்ஜின்னாவும் கலந்து கொள்ளும் நிலைமையும் ஏற்பட்டிருப்பின், நாட்டிலே நாசத்தைத் தரும் இந்தப் புயல் கிளம்பி இருக்காது. விருந்துநடந்தது, காங்கிரசின்தலைவருக்கு. லீக்தலைவர் அதிலே இல்லை. சர்க்கார் நடக்கிறது, பண்டிதரைத் தலைவராகக் கொண்டு. ஆனல் அதிலே லீகுக்கு இடம் இல்லை. ஆட்சியைப் பண்டிதர் ஏற்றுக்கொண்டார், ஆனல் அதிலே, லீக் கலந்துகொள்ளவில்லை. விருந்துக்கு அழைப்பு வராமற் போகவில்லை. ஆனல், ஜனாப் ஜின்னாவுக்கு கிடைத்த அழைப்பு, விருந்தை அளிக்கும் வைசிராய் மூலம் கிடைக்கவில்லை, விருந்துக்கு அழைக்கப்பட்ட பண்டிதர் மூலம் கிடைத்தது. எனவே ஜனாப் ஜின்னா அதில் கலந்து கொள்ளவில்லை - அதாவது ஆட்சியில்சேரவில்லை.

காங்கிரஸ் தோன்றிய நாள் தொட்டு அதிலும் குறிப்பாக "காந்தியக் காலத்திலிருந்து, இந்து-முஸ்லீம்இருவரும் ஒன்றுகூடி ஆளும் நிலைக்குத்தான் சுயராஜ்யம் என்று பெயர் பொருந்துமேயொழிய, ஒரு இனம் ஆள்வது மற்றோர் இனம் அதற்கு அடங்கி வாழ்வது என்ற நிலை வருமானல், அது சுயராஜ்யமாகாது, என்று வலியுறுத்தப்பட்டு வந்தது. முஸ்லீம்களின் மிகப் பெருவாரியான ஆதரவைலீக்பெற்றுவிட்டதைத் தேர்தல்கள் காட்டிவிட்டன. லீக்தான், முஸ்லீம்களின் உருவான, ஸ்தாபனம் என்பதைக் காந்தியாரே உணர்ந்ததால்தான், ஜின்னாவைக் கண்டு பேசினர். லீகின் தன்மையை ஒப்புக்கொண்டதால்தான், இந்திய விடுதலை பற்றிய பேச்சுகளில், ஜனாப் ஜின்னா, முஸ்லீம்களின் சார்பிலே அழைக்கப்பட்டு பேச்சு நடந்தது. இங்ஙனம் பலவிதங்களில்காங்கிரசும்-லீக்கும் சேர்ந்துதான், விடுதலைத் திட்டத்தைத் தீட்ட முடியும், தீட்டவேண்டும்; இரு இனத்தின் ஒன்றுபட்ட மனம் போல், இந்த அரசுக்குவேறோர் பலமான அரண் அமைய முடியாது என்றெல்லாம், கூறிவிட்டு, விளக்கிவிட்டு, பிரித்தாளும் பிரிட்டானியத்தின் தந்திரத்தால், இன்று, "ஜனாப் ஜின்னா வராவிட்டால் என்ன! லீக் இல்லாமற் போனல் என்ன, நாம் அரசு அமைப்போம், ஆங்கிலரளிக்கும் அரசுரிமையை அனுபவிப்போம், வேவல் விருந்தில் கலந்து கொள்வோம்," என்று, இதுபோது காங்கிரஸ் நடக்கலாயிற்று. இதன் விளைவாகவே, வைசிராய் வேவல், விருந்தளித்தார், பண்டிதருக்கு; அந்த விருந்து, பிரிட்டிஷ் - காங்கிரஸ் கூட்டுறவை, ஏகாதிபத்ய-தேசியக் கூட்டுறவைக் காட்டுகிறது. முக்கூட்டு ஒப்பந்தம் தேவை, தேவை என்று முன்பு பேசின பேச்செல்லாம் காற்றிலே பறந்தது. இன்று, பிரிட்டிஷ் - காங்கிரஸ் கூட்டாட்சி ஆரம்பமாகிவிட்டது என்பதற்கோர் எடுத்துக் காட்டு இந்த விருந்து. இதனால், முஸ்லிம் லீகின் மனதிலே ஆற்றமுடியாத புண் ஏற்படுவது சகஜம். புயல் கிளம்பினதற்குக் காரணம் இது. முழு உண்மை விளங்க இதனைக் கூற வேண்டுமானல் இந்து முஸ்லீம் கலகம் என்பது கூட முற்றிலும் பொருந்ாது, ஆளும் உரிமையை ஆங்கிலருடன் கூட்டாகப் பெற்ற காங்கிரசாருக்கும், கூட்டான ஆட்சி, உரிமை, கிடைக்கும் என்று எதிர்பார்த்துக், கிளர்ச்சி செய்து, இன்று, தன்னை நீக்கிவிட்டு ஓர் ஆட்சி நடக்கும் நிலையைக் கண்டு, கொதிக்கும் உள்ளம் கொண்ட லீக்குக்கும் இடையே மூண்ட கலகம்; அதுவேயன்றி இன்றைய ரகளை, "ராம் - ரஹீம்" போட்டியல்ல!

புயல் ஒருபுறம்! படகு வேறோர் இடத்திலே விருந்துச் சாலையாக இருக்கிறது.

புயலுக்குக் காரணம், காங்கிரசுக்குப் பிரிட்டன் அளித்த விருந்துதான்.

பண்டித ஜவஹர், ஆட்சி செய்வதற்கு, அவருடைய சொந்தத் திறமையைக் கவனித்தாலும் சரி, அவர் தலைமை தாங்கி நடத்தும் காங்கிரசின் சரித்திரம், சக்தி ஆகியவற்றைக் கவனித்தாலும் சரி, தகுதியும் உரிமையும் பெற்றவர்.

கப்பலேறி இங்கே கஷ்டப்பட்டுப் பிரயாணம் செய்து வந்த காரணம் தவிர, வேறோர் காரணம் காட்ட முடியாத, காட்டன், பேட்டன் போன்ற வெள்ளையர்களெல்லாம் ஆண்டனர்.- சகித்துக்கொண்டோம்- பண்டிதநேரு, ஆளும் திறமையோ, உரிமையோ பெற்றவரல்ல என்று நாம் ஏன் கூறப் போகிறோம்!

மேலும், பண்டிதர், இது வரை, வைசிராய் நிர்வாக சபையிலே இருந்து வந்தவர்கள் போல, அதிகாரப் படிக்கட்டுகளில், ஏறி ஏறிப் பழக்கப்பட்டு, அதன் பலனாகவே, உச்சிப் பீடத்தைப் பிடித்துக் கொண்டவர் அல்ல! போராடியவர். சிறையில் அடைபட்டவர். ஏகாதிபத்யத்தின் தாக்குதலைப் பெற்றவர்.

அது மட்டுமல்லாமல், உலகிலே, பல்வேறு நாடுகளிலே உள்ள விடுதலைக் கிளர்ச்சிக்காரர்கள், தலைவர்களுடன் தொடர்பு கொண்டவர்; காங்கிரசின் பெயர் உலகெங்கும் பரப்பப்பட்டபோது, பண்டிதரின் பெயரும் எங்கும் பரவிற்று.

ஆகவே, ஏகாதிபத்யத்தை எதிர்த்துப்போராடி, கஷ்டநஷ்டமுமடைந்து உலகம் அறிந்தவராகி உத்தியோக மண்டலத்து உருவாரங்கள்போலன்றி, உரிமைப்போர்புரிந்து, அறுபதாம் ஆண்டுக்கு அண்மைக்கு வந்தள்ள பருவத்தில், பண்டித ஜவஹர் பதவி ஏற்கிறார் என்றால், அதற்கு அவர், உரிமைகொண்டவரல்ல, திறமையில்லை என்று, குரோத குணம் படைத்தோர் தவிர வேறுயாரும் கூறிவிடமுடியாது. ஆனல் அவர்பீடம் ஏறியது, புயலைக் கிளப்பிவிட்டது. ஏன்? அந்த 'ஏன்?' எவ்வளவு தெளிவாக யோசிக்கப்பட்டு, அதற்கான விடை கண்டுபிடிக்கப்படுகிறதோ, அதைப்பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் இருக்கிறது.

பண்டிதஜவஹர், திறமையும்தகுதியும், உரிமையும் படைத்தவர் நாடாள என்று சொன்னேம். அதுபோலவே, ஒருபரந்த நாட்டிலே, பத்துக்கோடி மக்கள், தமக்கென ஒருபாதை, மார்க்கத்தில், மனப்போக்கில், கலையில் மொழியில், நடைநொடிபாவனையில் வகுத்துக்கொண்டு ஒரு இனமாகிவிட்டபிறகு, அந்தப்பெரிய சமுதாயத்தை, எண்ணிக்கையில் நாங்கள் முப்பதுகோடி, ஆகையால், எங்கள் ஆட்சிக்கு உட்பட்டுத்தான் இருக்கவேண்டும் என்று கூறுவது, நியாயமுமல்ல தேவையுமில்லை, நடைபெறக்கூடியதுமல்ல, நல்லாட்சிக்கு உகந்ததுமல்ல, அரசியல் யூகமுமாகாது.

"அலி சகோதரர்கள்" காலத்துக்குப்பிறகு, காங்கிரசின் பிடி, பெரிதும், முஸ்லீம் அல்லாதார் மீது இருந்ததேயொழிய, முஸ்லீம்கள்மீது இல்லை. சில ஆண்டுகளுக்குமுன்பு, பண்டிதஜவஹரே நடத்திப்பார்த்த "முஸ்லீம் பொதுமக்களுடன் தொடர்பு" ஏற்படுத்தும் திட்டமும்கூட வெற்றிபெற முடியவில்லை. நாளுக்குநாள், முஸ்லிம்கள், லீகின் கொடியின்கீழ் திரண்டனர் என்பதையும், முஸ்லிம்கள் "தங்கள் காந்தியைக்" கண்டுபிடித்துவிட்டனர் என்பதையும், தங்கள் சுயராஜ்யம், இவ்விதம் இருக்கவேண்டுமென்று திட்டம் அமைத்து அதற்குப்பாகிஸ்தான் என்று பெயரிட்டனர் என்பதையும் மறப்பது கூடாது, என்று நாடாளவந்திருக்கும் காங்கிரசாருக்குக்கூறுகிறோம்.

முஸ்லிம்கள், தனி அரசுத்திட்டத்தை வகுத்து, அவர்களை ஒன்றுபடுத்தி, ஒருகொடிக்கீழ் வரச்செய்து, ஓர் இனஉணர்ச்சியை ஊட்டிய ஜனாப்ஜின்னாவிடம், முஸ்லிம்கள்கொண்டிருக்கும்பற்றும்

(அடுத்த பக்கம் பார்க்க)

நம்பிக்கையும், அவருடைய ஆற்றலாலும், தன்னலமறுப்பாலும், கொள்கையைவிட மறுக்கும் கோட்பாட்டினாலும், வளர்ந்துவிட்டது—வளருகிறது—வளர்ந்துகொண்டே செல்லும் — அல்லாப்பிச்சைகளின் மனதைமாற்றும் அளவுக்குமட்டுமல்ல எல்லைக் காந்தியின் மனதையும் ஈர்க்கும் அளவு. இந்தச்செல்வாக்கும் இனஎழுச்சியும், இரண்டோர்கலவரங்களின் விளைவுபற்றிய உரையாலோ, அல்லது அடக்குமுறையினாலோ அடங்கிவிடாத, அழிந்துவிடாது.

ஆட்சி உரிமைதரும் அதிகாரங்களைக்கொண்டு, அரச உரிமைகோரும், பத்துக்கோடிமக்களைப் பணியவைக்கலாம், என்றால், இந்த உபகண்டத்து அரசியலுக்கு அதுதவிர வேறோர் காரியத்துக்கு நேரம் இராது; நினைப்பு வராது; அதன்பெயர் சுயராஜ்யமுமாகாது; 'கலவரஸ்தான்' காண அல்ல, கடுஞ்சிறைவாசம் தந்த கவலைக்கோடுகளைப் பண்டிதர் தமது முகத்திலே பெற்றது. இந்த 'ஜீவப்பிரச்னையை' உணர ஆழ்ந்த யோசனையில் இறங்கும்படி காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

முஸ்லிம் இனத்தின் இலட்சிய சின்னமாகவும், விடுதலை வீரனாகவும், விளங்கும் ஜனாப்ஜின்னாவின் கூட்டுறவைப் பெறாமல், பண்டிதர், அரசபீடம்ஏறினதால்தான், எந்தப்பண்டிதர் உள்ளபடியே நாடாளும் உரிமையும் தகுதியும், உழைப்பாலும் தியாகத்தாலும் பெற்றிருக்கிறாரோ, அவர் ஆட்சியிலே அமரும்போது நாட்டிலே அமளியிருக்கிறது. அமளிகளை அடக்கிவிடுவோம்! என்கின்றனர் காங்கிரசார். முடியும். ஆனால் அடக்கப்படும்அமளிகள், புரையோடிய புண்ணாகும். இந்திய உபகண்டத்திலே, ஓர்நிரந்தரஅமளிக்கு இடமளிக்கும். இந்நிலை சுயராஜ்யமாகாது.

லீக்கை "ஒதுக்கிவிட்டு' காங்கிரஸ் நாடாள்வதையும், அதற்குப்பிரிட்டன் இசைவதையும், கண்டபோது, ஜனாப்ஜின்னா இது பிரிட்டிஷ்—காங்கிரஸ் கூட்டுச்சதி" என்று ஏன் கூறமாட்டார்? அவருடையஉள்ளம்மட்டுமல்ல, அதுபோல எண்ணுவது, வேவலியவிருந்திலேபண்டிதர் கலந்துகொள்ளும் காட்சியைக்கண்டு.

பம்பாய் துறைமுகத்தருகே அந்த விருந்து நடைபெற்றிருக்கவேண்டும்; புதுடில்லியில் அல்ல. அதிலே வைசிராய் வேவல் இருந்திருக்கக்கூடாது, 'வேவல்பிரபு' இருந்திருக்கலாம், ஜனாப்ஜின்னாவும்இருந்திருக்கவேண்டும். அந்த விருந்தின்முடிவில், இந்திய சர்க்காரின் சார்பிலே ஒருவர் பேசுவதல்ல, பாகிஸ்தானின் சார்பிலே ஜனாப்ஜின்னாவும், இந்துஸ்தான் சார்பிலே பண்டிதஜவஹரும், வீடுதிரும்பும்வேவலுக்கும்ஏகாதிபத்யத்துக்கும், 'எங்களைப்பிடித்து இரண்டுநூற்றாண்டுகள் ஆட்டிப்படைத்ததுபோல, வேறுநாடுகளிலும் துவக்காதீர்கள். ஒரு நாட்டை மற்றோர் நாடு ஆள்வது காட்டுமிராண்டிக் காலம்" என்று பிரிவு உபசார மொழிகளாகக்கொஞ்சம் புத்திமதியும் அளித்திருக்கவேண்டும். அது விடுதலைவிருந்து! வெற்றி விருந்து! ஏகாதிபத்யம் ஒழிந்ததால் வரும் ஆனந்த விருந்து! புதுடில்லி விருந்து அதல்ல! வேவலிய வலையிலே சிக்கிய காங்கிரசின் தலைவருக்கு, ஏகாதிபத்ய சின்னம் "போனதெல்லாம் போகட்டும் நமக்குள் ஏற்பட்ட இந்தப்புது உறவு நிலைக்கட்டும்" என்றுகொஞ்சுமொழி கூறும், விருந்துபசாரம்.

இந்தச்சூட்சமத்தைக் கண்டதாலேதான் ஜனாப்ஜின்னா, இந்தக் கூட்டுச்சதியின் பிடியில் சிக்கவிடமாட்டேன் முஸ்லிம்களை என்று கூறுகிறார். புயலின் காரணம், புதியஉறவு! பண்டிதஜவஹரின் பண்புக்குத் துளியும் ஒவ்வாதஉறவு.

எனவேதான், காங்கிரஸ்காரரும், அஹிம்சைமூலமாக மட்டுமல்ல படை திரட்டித் தாக்கியேனும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை ஓட்டும் கொள்கைகொண்ட'சுபாஷ்போசின்'கட்சியினருமான சர்தார் சார்தூல்சிங் கவாஷீர் செப்டம்பர் 3-ந்தேதி, லாகூரிலிருந்து பண்டிதஜவஹருக்குக்கொடுத்திருக்கும்ஒருதந்தியில்,

"மோதிலாலின் திருமகனும், பரிபூரண சுதந்திரம் தேவைஎன்ற தீர்மானத்தின் கர்த்தாவும், வெள்ளையனே வெளியேபோ என்ற வீர முழக்கமிட்ட தலைவருமான பண்டிதஜவஹர், பிரிட்டிஷ் மன்னர்பிரானுக்கு ராஜபக்தியோடுநடந்துகொள்வேன் என்று ராஜவிசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொண்ட 'சேதி' கேட்டுக், கலங்கினேன்,' என்று குறிப்பிடுகிறார்.

'சகா' கலக்கமடைகிறார். பண்டித ஜவஹர், ராஜ விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக்கொண்ட 'சேதி' கேட்டு, ஏன்? ஏகாதிபத்யம், வெற்றி பெற்றுவிட்டது, போராடி அல்ல, சரசமாடி என்பது தெரிவதால்.

இடைக்கால சர்க்கார், புயலைக் கிளப்பியது மட்டுமல்ல, சர்தார் கவாஷீர் போன்றோர் மனதிலே கலக்கத்தையும் உண்டாக்கிவிட்டது.

இவ்வளவு பெரிய புயலையும் கிளப்பி விட்டுவிட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் புன்சிரிப்புடன் இருக்கிறது. ஏன்? அதற்குத் தெரியும் புயல் கிளம்பினால், காங்கிரஸ் சர்க்கார் அதனை, அடக்கக் கிளம்புவர், அடக்கும்போது, நம்மைத் துணைக்கு அழைப்பர், அதுபோது, நாம் நமது பிடியைப் பலப்படுத்திக் கொள்வோம்என்பது பம்பாய்க் கலகம் — பிரிட்டிஷ் படை சுட்டது! - எவ்வளவு இனிப்பான செய்தி ஏகாதிபத்யத்துக்கு! புயல் இருந்த வண்ணமிருப்பின், பிரிட்டிஷ் படை, பிரிட்டன் போகவேண்டும் என்றுகூடப் புறப்படும்; ஏனெனில், துறைமுகத்தருகே, 'தூபதீப நைவேத்தியத்துடன்," காங்கிரசாரே நின்றுகொண்டு, "என்னை விட்டோடாதேடா! கண்ணா! இங்கிருந்து நல்ல காவலும் புரிகுவாய்" என்று கீதம்பாடி உள்ளே அழைப்பார்கள் என்று ஏகாதிபத்யம் யூகித்திருக்கிறது.

"காங்கிரஸ், பிரிட்டிஷ் வலையிலே வீழ்ந்துவிட்டது. எட்டு மாகாண ஆட்சியும், மத்ய ஆட்சியும், பிரிட்டிஷ் துப்பாக்கி முனையின் துணை கொண்டுதான் காங்கிரஸ் நடத்த முடியும், இது பிரிட்டனுக்குச் சாதகமான நிலைமை, எங்கள் பிடியை விடுத்துவிட்டால், இந்தியா இரத்தக் காடாகும் என்று, இப்போதே நடைபெறும் கலவரங்களைக் காட்டி பிரிட்டன் பேசத் தொடங்கியும் விட்டது!" என்று ஜனாப் ஜின்னா, அமெரிக்க நிருபர் ஜெரால்டு ராக் என்பவருக்குத் தந்த விளக்க உரையில் குறிப்பிட்டார்.

புயலைக் காணவும், ஆங்காங்கு மக்கள் புலம்பும் குரலைக் கேட்கவும், அடிக்கடி போலீஸ் ராணுவத் துணையைத் தேடவுமே பண்டித ஜவஹர் பீடம் ஏறினார் என்றால் அதுபிரிட்டிஷ்ஏகாதிபத்யத்தின் தந்திர வெற்றி என்றே நாம் கருதுகிறோம். புயலிற் சிக்கிய படகாகியது இந்த நாடு என்பதை எண்ணும்போது, இந்த புயலைக் கிளப்பியதும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே என்பதும் தெரியும்போது, வேதனையும் வெட்கமும், இளைஞர்களின் உள்ளத்தில் பொங்குகிறது. இதனை, எல்லாக் கட்சியிலும் உள்ள வாலிபர்கள் உணர்ந்துகொள்ளும் நாளே ஏகாதிபத்யத்தின் வீழ்ச்சிநாளாகும் என்பது திண்ணம். "அந்த நாளும் வந்திடாதோ!" என்று வாலிப உலகு கேட்கிறது.

---

## செங்கொடிக்கு சேவை

●

சென்னைக்கார்ப்பரேஷன்கமிஷனர் மிஸ்டர் **ஷெனாய்,** செங்கொடிக்கு நல்லதோர் சேவை செய்துவிட்டார். ஆமாம்! அவருக்கே தெரியாமல் அந்த அரும் பணியைப் புரிந்திருக்கிறார். கம்யூனிஸ்டுகள், செங்கொடியின் பெருமையைப்பற்றிப் பேசவேண்டி இருந்தது. மிஸ்டர் ஷெனாய் பிரசாரகரல்ல, பெரிய சென்னை நகரின் கமிஷனர், எனவே அவர் பேசி அல்ல, செயல் மூலமாகவே, செங்கொடிக்குச் சேவை செய்திருக்கிறார்! ஏறக்குறைய பதினோராயிரம் பாட்டாளிகளின் குடிசைகளில், செங்கொடிக்கு இடம் கிடைத்துவிட்டது கமிஷனரின் கைங்கரிய பலனாக.

என்ன கைங்கரியம் செய்தார் கமிஷனர் ஷெனாய்? அது ஒரு ருசிகரமான கதை.

சென்னைக் கார்ப்பரேஷனின் நகர சுத்தி வேலை செய்யும் பதினோராயிரம் பாட்டாளிகள் கூலி உயர்வுக்காகக் கோரிக்கை வெளியிட்டனர், மனுச் செய்து கொண்டனர், மந்திரிமாரிடம் முறையிட்டனர், "வயிற்றிலடிக்க வேண்டாம் தோழா!" என்று கெஞ்சினர். பலிக்கவில்லை. பிறகு, வேலை நிறுத்தம் செய்தனர். கடந்த மூன்று வார காலமாக.

"இவர்கள் வேலை செய்ய வராவிட்டால் வேலையே நின்றுவிடுமோ! வீதி எல்லாம் குப்பை மேடாகி விடுமோ!" என்று கூறினர், "நம்ம சர்க்காருக்கு நாமேவா தொல்லை தருவது" என்ற நல்ல பிள்ளைப் பாடம் படிக்கும் நண்பர்கள்.

ஊழியர்கள் - சமூக சேவை செய்பவர்கள் - காங்கிரஸ் தொண்டர்கள் கிளம்பினர். எதற்கு? பாடு படும் பதினோராயிரம் பேருக்குக் கூலி உயர்த்தவா! இல்லை! இல்லை! "குப்பை கூட்ட வரமாட்டேனென்று கூறுகிறாய்! போ! இதோ பார், நாங்களே நகரைச் சுத்தம் செய்கிறோம்" என்று கிளம்பினர். மந்திரியாரே முன் வந்தார், மகத்தான பணி புரிய!

பத்திரிகைகளோ, பாடல், படம், கட்டுரைமூலம், சென்னை சுத்தமாகவே இருக்கிறது என்று செய்தி தந்து வந்தன. வேலை நிறுத்தம் தளர்கிறது - முறிகிறது - பலர் திரும்புகின்றனர் - நிலைமையில் விசேஷ மாறுதல் - என்ற பதங்களைப் பத்திரிகைகள் பிரயோகித்தன.

இந்தச் சமயத்திலேதான் கமிஷனர் ஷெனாய் செங்கொடிக்குச் சேவை செய்தார்.

"சார்! இந்தத் தோட்டிகள் இவ்வளவு பிடிவாதமாக வேலை நிறுத்தம் செய்வது யாரால் தெரியுமா! செங்கொடிக்காரர்களால்தான்! கம்யூனிஸ்டுகளின் தூண்டுதலால், நிர்ப்பந்தத்தால்தான் இந்த வேலை நிறுத்தமே நடக்கிறது. தோட்டிகளில் பலர் - மிகப் பெரும்பான்மையானவர்கள் வேலைக்கு வர விரும்புகிறார்கள். இந்தச் செங்கொடிக்காரரே தடுக்கிறார்கள், பயமுறுத்துகிறார்கள், பலாத்காரம் செய்கிறார்கள்" என்று பேசினார். ஒருமுறையல்ல! பலமுறை! இந்தப் பேச்சின் மூலமாகத்தான், சென்னையும் வெளியூர்களும், ஏழைத் தோட்டிகளின் சார்பாகச் செங்கொடியினர்தான் நின்று போராடுகிறார்கள் என்பதை விளக்கமாகத் தெரிந்துகொண்டனர். செங்கொடி! செங்கொடி!! என்று கமிஷனர் ஷெனாய், செய்துவந்த பிரச்சாரம், அவருக்கும், வேலை நிறுத்தத்தை முறியடிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டவர்கட்கும் கண்டனச்சொல்லாகத் தோன்றிற்று; கடைசியில் பார்க்கப் போனால், அது 'அர்ச்சனை'யாக மாறிவிட்டது பலனைக் கவனிக்கும்போது. "செங்கொடிக்காரர் தரும் தொல்லை [illegible]து? சரி! சரி! இனி இந்தத் தோட்டிகளை ஆதரிக்க முடியாது" என்று

(6-ம் பக்கம் பார்க்க)

## செங்கொடிக்கு

*5-ம் பக்கத் தொடர்ச்சி*

நகரம் தீர்மானித்து விட்டதோ? இல்லை! செங்கொடியோ கருங்கொடியோ, வேலை நிறுத்தம் செய்பவன் ஒரே ஒரு கேள்வி கேட்கிறான், பதில் கூற முடியாதபடி, "மகாப்பிரபுலு! மன மந்திரிகாருலு அந்தாகூட ஜீதமு ஜாஸ்திகா சேஸ்கோன்னாரண்டி. மேமு, பீதவாள்ளு, மாஜீதமு எந்துகண்டி, கொஞ்சம் எக்குவ காகூடது?"

["மகாப்பிரபுக்களான நமது மந்திரிமார்களெல்லாம் கூடச் சம்பளத்தை உயர்த்திக் கொண்டார்களே ஐயா! நாங்கள் ஏழைகள். எங்கள் சம்பளத்தை ஏனய்யா கொஞ்சம் கூட்டித் தரக்கூடாது?"] என்று கேட்டனர்.

பதில் என்ன சொல்ல முடியும்? பரம்பரை பரம்பரையாக ஒரே பதில்தானே உண்டு, இந்த மாதிரிச் சமயத்துக்கு, "போடா வாயாடி.!" இந்த முறை, கமிஷனர் ஷெனாய், அந்தப் பதிலை அளிக்கவில்லை, "இதெல்லாம் இந்தச் செங்கொடிக்காரன் சொல்லிக்கொடுத்து இவன் கேட்கிறான்" என்றார். இந்தப் பேச்சைத்தான் அவர் 'கண்டனம்' என்று கருதிக்கொண்டார் பாபம்! அவர் அறியார், அந்தப் பேச்சே, செங்கொடிக்கு ஒருவர் செய்யக்கூடிய சிறந்த சேவை என்பதை. அவர் சொன்ன வாசகத்தின் மூலம் தோட்டிகளும் மற்றத் தொழிலாளரும், பொது மக்களும், புதியதோர் உண்மையைக் கண்டனர்; என்ன அது? தெருக் கூட்டுபவனின் துயரையும் துடைக்கச் செங்கொடியினர் கச்சையை வரிந்து கட்டுகின்றனர் என்ற உண்மையை!

உறுதியுடன் வேலைநிறுத்தம் நடந்தது. உருட்டல் மிரட்டல், சிறை, அடி, சீற்றம், கண்டனம், என்று பலரகமான வெடிகுண்டுகள் வீசப்பட்டன. குப்பைமேடு சென்றன! ஏற்கனவே குவிந்த குப்பையுடன் குப்பையாக.!

3-தேதி வேலைநிறுத்தம் நின்றது; ஒருதேசியத்தாளின் பாஷையிலேகூற வேண்டுமானால், "வாபஸ்" வாங்கப் பட்டது. பதம் எதுவேனும் இருக்கட்டும், பலன்தானே முக்கியம். அது இது:—

15-ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கும் தோட்டிகள் அனைவருக்கும், இனி, 15-ரூபாயாக்கப்படும் சம்பளம். குடிஇருப்பு அலவன்சாக 2-ரூபாய் வேறு தரப்படும். ஆக, இனிக், குறைந்த பட்சம் 17 ரூபாய் பெறுவார்கள் எல்லாத் தோட்டிகளும்.

இத்துடன், சர்க்கார் சிப்பந்திகள் அனைவருக்கும் தரப்படுவது போலவே தோட்டிகளுக்கும், 16-ரூபாய் பஞ்சப்படி தரப்படும். மற்றச் சிப்பந்திகளுக்கு, இந்தப்பஞ்சப் படியைச் சர்க்கார் உயர்த்தினால், இவர்களுக்கும் உயர்த்தப்படும்.

பதினைந்து ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கும் தோட்டிகளுக்கு, 3-ரூபாய் சம்பள உயர்வும், 2-ரூபாய், குடி இருப்பு அலவன்சும் தரப்படும்.

வேலைநிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட காரணத்துக்காக, யாரும் வேலையிலிருந்து தள்ளப்படமாட்டார்கள் மற்றும் சிலசலுகைகள்.

வேலைநிறுத்தம் நின்றது, தோட்டிகளின் குறைகள் ஓரளவு தீர்க்கப்பட்டபிறகு!

செங்கொடிதான் வேலைநிறுத்தத்துக்குக் காரணம் என்று கமிஷனர் ஷெனாய் ஓயாமல் கூறி வந்தார். வேலை நிறுத்தத்தின் காரணமாகக் கூலி உயர்ந்தது, ஆகவே, பதினாயிரம்பேரும் அவர்களின் போராட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்தபல இலட்சம் மக்களும், என்னமுடிவுக்கு வரமுடியும்? செங்கொடியை நம்பினோர் ஜெயம்பெறுவர்! என்பது தானே-

அதிகச் சம்பளம் வாங்கிய உடனே, செங்கொடி கவனம் தானே வரும் அவர்கட்கு!

"சென்னைநகரில் உள்ள 580 குப்பை வண்டிகளும் கிளம்பி விட்டன" என்று ஒருபத்திரிகை ஆயாசந்தீர்ந்த உள்ளத்தோடு எழுதுகிறது. அந்தவண்டிகளிலே குப்பை கூளங்கள் மட்டுமல்ல, உருட்டல் மிரட்டல், கேலிகிண்டல், எல்லாவற்றையும் சேர்த்துக்குவித்து, அப்புறப்படுத்தும் வேலையல்லவா நடக்கிறது. அந்தச்சமயத்திலே எல்லாம் செங்கொடியின் கவனந்தானேவரும்! இவ்விதமாகச் செங்கொடியின் பெருமையைப் பாட்டாளிகள் உணரும் வண்ணம் சேவைசெய்திருக்கிறார் கமிஷனர் ஷெனாய்.

"துரதிர்ஷ்டவசமாக" அவர், "தோட்டிகள் வேலை செய்வது பாபம், வயிற்றுக்குப் போதாததால்தான். கம்யூனிஸ்டு கிளர்ச்சியுமல்ல, செங்கொடி வேலையுமல்ல. பசி—போராடுகிறான்" என்று கூறிவிட்டிருந்திருப்பின், செங்கொடியின் சிறப்பு வெளிவந்திராது! எனவேதான், கமிஷனர் ஷெனாய் செங்கொடிக்குச்சேவை செய்தார் என்றுகூறுகிறோம். அவர் மனம் எப்படியோ. "எப்படி எப்படியோ முயன்றும், நம்மால் முடியாமலே போய்விட்டதே இந்த வேலை நிறுத்தத்தைமுறியடிக்க" என்று எண்ணி, கோபத்தால் முகம் சிவந்துவிடுகிறதோ என்னவோ, யார் கண்டார்கள்.

—

## மறைவு

ஜலகண்டபுரம் தோழர் ப. கண்ணன் அவர்களின் அன்னை சிவகாமி அம்மையார் சிலநாள் நோய்வாய்ப்பட்டிருந்து 28—8—46-ல் இயற்கை எய்திவிட்டார்கள் என்ற செய்தியை அனுதாபத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—

## பேட்டி மகஜர்

*8-ம் பக்கத் தொடர்ச்சி*

படும் துயரம், உணவு நெருக்கடி, உடை நெருக்கடி, உரிமையில்லாததால் நேரிடும் ஊறுகள், ஆகியவைபற்றி ஓயாமல் பிரசாரம் செய்து, பதவியில் உட்கார்ந்தாகி விட்டது. இனி "பேட்டி" கண்டு, "மகஜர்" சமர்ப்பிக்க வேண்டியதுதான் மக்கள்; மந்திரிமார்கள், பழைய நாட்களிலே துரைமார்கள் சொன்ன பாணியிலேயே, "ஆழ்ந்த அனுதாபத்துடன் கவனிக்கிறோம்" என்று பதில் அளிப்பார்கள்; அந்தப் பதில் திருப்திகரமாக இல்லையே என்று சொன்னால், கிளர்ச்சி செய்தால், தடியடி நடக்கும் - தடியடி என்றால், எல்லாத் தடியடியும் ஒன்றாகுமா! - தேசியத் தடியடி நடக்கும். ஐயோ! ஐயோ! என்று முன்புபோல் மக்கள் கூவத் தேவையில்லை, காந்தியாரின், ராம்! ராம்! போல்! போல்!! அருமையான சந்தமாக அமையும்; இந்த அற்புதமான சந்தர்ப்பத்தில் காங்கிரசில் உள்ள திராவிடத் தோழர்கள் இதுபற்றி என்ன எண்ணுகிறார்களோ தெரியாது. நமக்கு வெட்கமாக இருக்கிறது நமது மந்திரிகள் காலத்திலேயும், முன்பு இருந்த பேட்டி - மகஜர் முறை இருக்கிறதே என்று.

வெட்கக் கேட்டை இன்னும் அதிகப் படுத்துவதற்காகவோ என்னமோ, இந்தவேதனையான சம்பவத்திலே, இன்னோர் தகவலும் இருக்கிறது. முதலமைச்சரிடம் சமர்ப்பித்தார்களே மகஜர், அதிலே, சில, எம். எல். ஏ.க்களும், காங்கிரஸ் அரிஜன எம். எல். ஏக்களும் கையொப்பமிட்டிருந்தனராம்! இந்தப் பூனாரம் பூண்ட புதுமையைக் கண்டதுண்டா! மக்களின் குறைகளைத்தீர்க்க, அவர்களின் பிரதிநிதிகளாகச் சிலரைத் தேர்ந்தெடுத்துச்சட்டசபைக்கு அனுப்புகிறோம். அங்கே அழகும் ஆற்றலும், ஆண்மையும் விளங்க இந்த எம். எல். ஏ-க்கள் தத்தமது தொகுதிகளில் உள்ள குறைகளை எடுத்துவிளக்கி, ஆட்சியாளர்களை ஆட்டிவைக்க வேண்டும், எதிர்க்கட்சியாக இருந்தால். ஒத்துழைத்துவேலைவாங்க வேண்டும், சொந்தக் கட்சியினராக இருந்தால். இந்த எம். எல். ஏ-க்கள் மந்திரிக்கட்சி! ஆனால் இந்த எம். எல். ஏ. க்கள் என்ன செய்கிறார்கள்? மகஜர் சமர்ப்பிக்கிறார்கள்!! பரிதாபம்! பரிதாபம்!!

●

## கோபிசெட்டிபாளையம்

தோழர் ஏ. இராமசாமி மகன் மீனாட்சியின் சாதணிவிழா 1–9–46 நடந்ததன்பொருட்டுத் "திராவிட நாடு" வளர்ச்சிக்கு ரூபாய் 5—0—0 அன்பளிப்பு வழங்கப்பட்டது.

—

## அமைதி

*3-ம்பக்கத் தொடர்ச்சி*

150 தொழிலாளர்கள் காயத்துடன், சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்பட்டனர். 30-பேர், ஆஸ்பத்திரியிலேயே படுத்துள்ளனர் சிகிச்சைக்கு.

அனந்தன் நம்பியார், பானு, ரஹீம் எனும் தொழிற் சங்கத்தலைவர்களைப் போலீசார் அழைத்துச் சென்றனர், மற்றதலைவர்களைத் தேடுகிறார்கள் போலீசார்.

பொன்மலை ரயில்வே காலனியிலும் திருச்சி நகர்பூராவும், பலமான போலீஸ் பாரா.

மலபார்ஸ்பெஷல் போலீசார் ஏராளமாக உள்ளனர் இந்தப்பகுதியில்.

மதுரை வந்து சேர்ந்த, தொழிற் சங்கதலைவர் தோழர் பி. ராமமூர்த்திகைது செய்யப்பட்டார்.

பிறபிறகு!

இவ்வளவும், நடத்திக்கொண்டு அமைதிநிலவுகிறது என்று எப்படிக் கூறலாம் என்றுயாரும் கேட்காதீர்கள்.

கூட்டங்கள், ஊர்வலங்கள், மறியல், ஆகியவற்றை மட்டுமல்ல, இவ்விதமான கேள்விகள் கேட்பதைக் கூடத்தடுக்க முடியும். 144! வரும். ஜாக்ரதை!

எங்கள் பிரதமர் கூறுகிறார்கேளுங்கள். நம்புங்கள், அமைதி நிலவுகிறது!

தடைஉத்தரவு, தடியடி, துப்பாக்கிப்பிரயோகம், கைது செய்தல், 144 ஆகிய இவ்வளவும் செய்துகொண்டு, அமைதிநிலவுகிறதுஎன்று எப்படிக் கூசாமல் கூறுகிறீரய்யா! என்று கேட்கத் தோன்றுகிறதோ!

நோருமூய்! நேனுசெப்தே, கப்சிப், மாடாடக,மூய்நோரு.

அப்படி என்றால் என்ன என்கிறீரா!

"வாயைமூடு. நான் சொல்லும்போது, கப்சிப், பேசக் கூடாது. மூடுவாயை!" என்று அர்த்தம். ஆஹா! அப்படியா சொல்கிறாய் என்று என்மீது கோபிக்கவேண்டாம்; இதெல்லாம் நான்' பிரதமர் சார்பிலே சொன்னேன். அமைதி நிலவுகிறது—அறிந்து கொள்க!

## அன்பழைப்பு

பெரியாரின் அண்ணார் வைத்திய வள்ளல் தோழர் E. V. கிருஷ்ணசாமி அவர்களின் திருமகன், திராவிட மாணவர் கழகத் தலைமை பூண்டு பணிபுரியும் தீரன்,

**தோழர் E. V. K. சம்பத்**

திருப்பத்தூர் வழக்கறிஞர் தோழர் G. சாமி நாயுடு அவர்கள் திருக்குமாரி

**தோழியர் சுலோச்சனா**

அம்மையாரை

வாழ்க்கைத் துணைவியாகக்கொள்ளும் பதிவுத் திருமண விழா

**15—9—46 ஞாயிறன்று**

வடாற்காடு திருப்பத்தூரில், மணமகள் இல்லத்தில் நடைபெறும்.

சென்னை வழக்கறிஞரும், முன்னாள் அமைச்சருமான

தோழர் S. முத்தையா முதலியார் அவர்கள்

விழாவில் தலைமை வகிப்பார்.

பெரியார்,

வாழ்த்துரை பகர்வார்.

**அன்பர்கள் வருக!**

# பேட்டி! மகஜர்!

★

ஆந்திரநாட்டைச்சார்ந்தபழங்குடி மக்களின் பிரதிநிதிகள் பலர், அங்குள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறி அவற்றினைத் தீர்த்துவைக்கும்படி முதலமைச்சர் தோழர் பிரகாசம் அவர்களை ஆகஸ்ட் 25ந்தேதி, "பேட்டி" கண்டுபேசியதுடன், ஒரு மகஜரும்'சமர்ப்பித்தனர்என்றசெய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வெளி வந்திருக்கிறது.

"பேட்டி" காண்பது,'மகஜர்' சமர்ப்பிப்பது என்ற பதங்கள், சாதாரணமாக, மக்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ளாத, அதிகார அமுல் சுபாவம் படைத்த, சர்க்காரிடம், மக்கள் கையாளும் முறை. பொதுஜன சர்க்கார் இல்லாததால் இவ்விதம் 'பேட்டி' காணவேண்டி இருக்கிறது, 'மகஜர்'சமர்ப்பிக்க வேண்டி இருக்கிறது; அதிகாரிகளுக்கு அமுல் நடத்தத்தெரிகிறதேயொழிய, மக்களுக்குள்ள குறைகள்என்ன, அவைகளைப் படிஎப்படிநீக்குவதுஎன்றநோக்கமும் அக்கரையும் இருப்பதில்லை, இதற்காகத்தானய்யா, சுயராஜ்யம்வேண்டும் வேண்டும் என்று கூறுகிறோம். நம்முடைய சர்க்காராக இருந்தாலல்லவா, நமது ஜனங்களுக்குள்ள குறைகள் இன்னின்னவை என்பதுதெரிய முடியும். எவனோ அன்னியன், அதிலும் நமது ஜனங்களுடன் நெருங்கிப்பழகாதவன் ஆள்கிறான், நாம் அவனைப் 'பேட்டி' காண்பதும், 'மகஜர்' சமர்ப்பிப்பதுமாகஇருக்கவேண்டி நேரிடுகிறது என்று மேடைகளில், பலர் முழக்கமிட்டனர்.

'ஆஸ்டினுக்கு என்ன தெரியும், ஆச்சாரியாருக்கு அல்லவா நமது சுகதுக்கம் தெரியும், புரியும்! பிரவுன்துரைக்கு என்ன தெரியும், பிரகாசம்காருவுக்குத் தானே தெரியமுடியும்!' என்று சித்திரநடையிலே பேசினவர்களும் உண்டு.

"வெள்ளைக்காரன்கண்களிலே நம்முடைய கஷ்டம் எப்படித் தெரியும்! அவனுக்கோ பூனைக் கண்!" என்றுநகைச்சுவையுடன் பேசினவர்கள் உண்டு.

"பேட்டி — மகஜர்—என்ற வார்த்தைகளையே எங்கள் அகராதியிலிருந்து அடியோடு நீக்கிவிடுவோம்" என்றுகர்ஜனைபுரிந்தவர்கள் உண்டு.

"முற்காலத்திலே நமது மகாராஜாக்கள், ஜனங்களுடையசுகதுக்கங்களை நேரிலே கண்டறிய, மாறுவேஷம் அணிந்துகொண்டு ஊரில் உலாவி விஷயங்களைத் தெரிந்துகொள்வார்கள். வெள்ளைக்காரர்கள், ஜனங்கள் எக்கேடுகெட்டால் என்ன என்று இருப்பவர்கள்தானே! ஊர்சுற்றுவார்களா? வெளியே இந்தத் துரைமார்கள் கிளம்பினாலும், மோட்டாரில் சவாரி, பிறகு டீபார்ட்டி, டான்ஸ்பார்ட்டி இவைகள்தானே!" என்றுகேலி பேசியவர்கள் உண்டு.

பேட்டி—மகஜர் என்றபதங்கள், தேசிய மேடைகளிலே,பல விதத்தில் உபயோகிக்கப்பட்டன.

இப்போது ஆட்சியில் உள்ளவர்கள், தேசியத் தலைவர்கள். நாடுசுற்றி, மக்களிடம் பழகி, மக்களின் குறைகளைநன்குஅறிந்தவர்கள். அறிந்தவர்கள் மட்டுமல்ல, அவைகளை ஆங்கிலருக்கு எடுத்துக்கூறினவர்கள்; இடித்துக்கூறினவர்கள். குறைபாடுகளை ஒழிக்கவழி வகுத்தவர்கள். அந்தவழியிலே இன்னின்ன கஷ்டங்கள் உள்ளனவே என்றுஅதிகாரிகள் சொன்னபோது, மனமிருந்தால் மார்க்கம் உண்டு, என்றும், "உன்னால் செய்ய முடியவில்லையா! சரி! உனக்கு ஆளும் யோக்யதை இல்லை. போ வெளியே! நாங்கள் ஆள்கிறோம்" என்று வீரமாகப்பேசியவர்கள். உண்மையிலேயே, பேச்சிலே மட்டுமல்ல, காரியத்திலேயும் இவர்கள் அசகாய சூரர்களாகவே இருப்பார்கள் என்று, பொதுமக்கள் எண்ணும் அளவுக்குப் பேசினவர்கள்.

அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் ஆட்சிப்பீடத்தில்! ஆனால், அவர்கள்காலத்திலேயும்,மக்கள் தங்கள் கஷ்டங்களைப் போக்கிக் கொள்ள,பேட்டிகாண்கிறார்கள்; மகஜர் சமர்ப்பிக்கிறார்கள்! என்னவிசித்திரம் இது!

ரயிலடியிலே, வரிசையாக இருக்கும் வண்டிக்காரர்கள், வம்புக்கு அல்ல, தங்கள் வாழ்க்கைஉபாயமாகஒருமுறை கையாள்வார்கள்.

"சாமி! ஐயோ! ஐயோ! போயும் போயும் அந்தநொண்டி மாட்டுவண்டியிலேயா போய் ஏறுகிறீர்கள். அது மாதம் காத வழிமாடு சாமி" என்பான் ஒரு ஆசாமி. நம்பி, அவன் வண்டியில் ஏறினாலோ, அவன் சிங்கம் போலத்தான் கர்ஜிப்பான், மாடோ, அன்னநடைநடக்கும்!

"எம்பா! மாட்டைக் கொஞ்சம் தட்டி ஓட்டேன்.'

"சாமி! அதுபாவம்வாயில்லா ஜந்து. நம்மைப்போல அதுக்கு வாய் இருக்காபேச"




ஜெயராம் காயசுத்தி லேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி,புளித்தேப்பம்,வயிற்றுப்பிசம் குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.

வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,

28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.


"அது சரியப்பா! நேரமாகிறதே"

"இதோ, பெருநடையாத் தானே போகுது, போயிடலாம் இருங்க"

"சரியப்பா! கொஞ்சம்ஓட்டு'!

"சாமி! ஓட்டம்எப்பவும்மாட்டுக்கும் கெடுதி,மனுஷாளுக்கும் ஆகாது. உடம்புக்குவீண் அலுப்புங்கோ. இப்படி நடையா போனா, உடம்புக்குக் கஷ்டமில்லாமே போய்ச்சேரும். சீக்கிரமாப்போகணும்னு வேகமாக ஓட்டினா, இருட்டுவேளை, ரோடு ரொம்ப மோசம், எதிர் வண்டி பக்கத்துவண்டிக்காரனுங்க படுபாவிப்பயலுக, வேணுமென்றே வண்டியை மோதவிடுவாங்க, நீங்கப்பாவம் குழந்தைகுட்டி மூட்டைமுடிச்சோடு வருகிறவங்க, வண்டி எங்கேயாவது குடைகவிழ்ந்தா என்ன ஆகும் கதி!"

வண்டிக்காரரின் இந்த வாசகம் இருக்கிறதே, இது அரசாள்பவருக்கு அரிச்சுவடியாகிவிட்டது.

பேட்டிகண்டு, மகஜர் சமர்ப்பித்து, அலுத்துப்போனமக்கள், மஞ்சள் பெட்டியிலே ஓட்டு போட்டு, மக்களின்சர்க்காரைப் பீடத்தில் ஏற்றினார்கள். ஏற்றும்போது, பேட்டி பார்ப்பது மகஜர் நீட்டுவதுபோன்ற பீடை ஒழியும், நமது தலைவர்கள் தலையிலே கிரீடம் இருக்கிறது! அவர்களுக்கோ நமது சங்கடம்என்ன என்பது நன்றாகத்தெரியும்! அவர்களைப்பேட்டியும் காணவேண்டியதில்லை, மகஜரும் தரவேண்டியதில்லை; தாமாகவே, நமது குறைகளைத்தீர்த்துவைப்பார்கள் என்று மக்கள் நம்பினர்; பேசினர்; அதேமக்கள், பழையநாட்களிலே, பரங்கியின் ஆட்சி இருந்தகாலத்திலே,அதிகாரவர்க்கம் ஆண்டபோது,செய்ததைப் போலவே,இப்போதும்'பேட்டி' காணவேண்டியிருக்கிறது—'மகஜர்' தரவேண்டி இருக்கிறது. "நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும் தோட்டிக்குப் புல்சுமை போகாது" என்பார்களே, அந்தக்கதையாக வந்துமுடிந்தது.

இன்றுள்ள மந்திரிமார்கள், இலண்டனல்ல, லங்காஷயரல்ல பேட்டையிலும் குப்பத்திலும், சேரியிலும் பட்டியிலும் உள்ள குறைகளைத் தெரிந்துகொள்ளாதிருக்க! நம்மவர்கள்! இங்கே மூலைமுடுக்குகளிலேயும் உலவி, நாட்டு நிலைமை நன்கு அறிந்தவர்கள். இவர்களையுமா பேட்டி கண்டு, மகஜர்மூலம் விஷயத்தை விளக்கவேண்டும்! ஆட்சி செய்கிற ஆட்கள் மாறினார்களேயொழிய, அதிகாரமுறை ஒன்றும்மாறக்காணோமே? அதிகாரிகள் காலத்திலேயும் பேட்டி இருந்தது, இப்போதும் இருக்கிறது! பழையகுருடிதான் புதிய வீட்டில் குடிஏறி இருக்கிறாள்! இதனால் மக்களுக்கு இலாபம் என்ன!

மார்வலிக்காரன், "தீராதவல்வினையைத்தீர்த்து வைப்பாய் கோவிந்தா" என்று கூவிக் கொண்டு, மலைஏறி இறங்கும்போது, ஏறும்போது இருந்த மார்வலியுடன், ஏறி இறங்கியதால் கால்வலியும் சேரக்கண்டகதைபோலாயிற்றேயொழிய "அப்பா! நம்மவர்கள் ஆட்[illegible] செய்கிறார்கள். நமது சங்கட[illegible] ஒழிந்தது. பாழாய்ப் போ[illegible] பேட்டி காணுகிற தொல்லை[illegible] மகஜர் தருகிற சங்கடமும்ஒ[illegible]தது. மக்களின் சர்க்கார் நட[illegible]றது" என்று கூறி ஆறுதல்[illegible] ஆனந்தமும் பெறமுடியவி[illegible]லையே. இப்போதும், 'பேட்டி' "மகஜர்" இருக்கிறது!

'முன்பாவது,இவ்வளவுகுறைபாடுகள் உள்ளனவா; நாங்கள் கவனிக்கிறோம்' என்று, அதிகாரி கூறுவார். பேட்டிகண்டவர், போய்வந்த சங்கடத்தையும் மறந்து, "பரவாயில்லைசார்! கவனிக்கிறேன் என்று சொன்னார். அவருக்கு என்ன தெரியும்? நான் விஷயங்களை விளக்கி,இன்னின்ன கஷ்டம் இருக்கிறது என்று தெரிவித்த பிறகுதான் அவருக்கு விஷயமே புரிந்தது" என்றுகூறி ஒருவகைத்திருப்தி பெற முடிந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)




உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக்கைத்தறி கலர் புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார்செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,

கைத்தறி ஜவுளி வியாபாரம்,

34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,

உறையூர் p. o. திருச்சி.

## பேட்டி மகஜர்

7-ம் பக்கத் தொடர்ச்சி

இப்போது அதுவும் இல்லை. மகஜரைப்படிக்காமலேயே மக்கள் சர்க்காரின் பிரதிநிதிகூறுகிறார், "இதென்னசார் எனக்குத் தெரியாதா இந்த விஷயங்கள். நான் என்ன புதிசா? எல்லாம் தெரிந்த விஷயம் தானே!" என்று கூறிவிடுகிறார்.

அதிகாரி, கவனிப்பதாகச் சொல்லி அனுப்பிக்கொண்டிருந்தார். மந்திரிமார்களோ,'அந்தக் குறைகளைப் போக்குவதற்காக வேலை செய்தால் இன்னின்ன தொல்லை இருக்கிறது, சங்கடம் இருக்கிறது' என்று கூறி அனுப்பி விடுகிறார்கள்.

பேட்டி கண்டுவிட்டுத்திரும்புகிற ஆசாமி பிறகு மந்திரிக்கு வக்கீலாகி, மகாஜனங்களிடத்திலே, "இந்தக் காரியத்தைஇப்போது செய்வதற்கில்லை; ஏனெனில் அதனாலே பல தொந்தரவுகள் உள்ளன" என்று பேசியும் விடுகிறார்.

பேட்டியும் மகஜரும் இன்றும் முறையாக இருக்கிறதென்றால், ஆட்சிமுறை மாறவில்லை என்று தான் பொருள். இதுவா சுயராஜ்யம்?

கனம். பிரகாசம், காங்கிரஸ்காரர், அரிஜன நண்பர்; காந்தி பக்தர்; அவருக்கு, அரிஜனங்கள் படும் துயரை விளக்கிக் கூற, இன்னொருவர் "பேட்டி" காண வேண்டுமா! பெதிக்வாரன்சுக்குத் தெரியாது, அவரிடம் மகஜர்தந்து விஷயத்தை விளக்க வேண்டி இருந்தது; பிரகாசம் பந்துலுவுக்குமா அந்த 'பேட்டி' முறைதேவை! ஆனால் 25-ந்தேதி அவரைப் 'பேட்டி' கண்டு, அரிஜனங்கள் படும்கஷ்டத்தை விவரித்துக் கூறியிருக்கிறார்கள்! எவ்வளவு வேடிக்கை! அந்த வேடிக்கையின் ஊடே உள்ள வேதனை எப்படிப்பட்டது! கரும்பு இனிப்பாக இருப்பதற்குக் கற்கண்டு தேடும் கதையா இது! பொதுமக்கள் சர்க்காருக்குப்பொதுமக்களின் கஷ்டத்தைப் பேட்டி மூலம் குறிவிக்க வேண்டுமோ! பிரனமே ம் அறியாரா? குப்பை

ரகாசம்காரு ஆந்திரர்! 3-ட்டிகண்டவர்களும் ஆந்திரர்; பேசிய விஷயமோ ஆந்திர பிரட்டிலே உள்ள அரிஜனங்களின் குறைகளைப் பற்றி. எப்படி இருக்கிறது வேடிக்கை! ஆந்திரநாட்டிலே உள்ள அரிஜனங்களின் துயரை, ஆந்திரநாட்டவரும், அரிஜன நண்பரும்நாடு சுற்றியவரும் மக்களை ஈடேற்றுவேன் என்ற கங்கணம் கட்டித் தேர்தலில் வென்றவரும், அரிஜனங்களை ஆங்கில ஆட்சி முன்னேறச் செய்ய வில்லை, அதனைச் செய்ய எமக்கே முடியுமென்று பேசினவருமான பிரகாசம்காருவுக்கு, ஆந்திரநாட்டுத் தோழர்கள் சிலர், "பேட்டி—மகஜர்" முறையைக் கையாளவேண்டி இருந்தது!

பல ஆண்டுகள் மக்களிடம் பழகி, அவர்கள் படும்கஷ்டங்களை அறிந்து, அவைகளை ஒழிக்கத் தீவிரமான திட்டங்களைப் பொதுமக்களிடை பேசியபிரகாசத்திடமுமா, பேட்டி மகஜர் முறை இருந்து தீரவேண்டும்! ஆம் என்றால், ஆட்சி மாறினதால், மக்கள் அடைந்தபலன் என்ன?

"பேட்டி—மகஜர்" முறை இருக்கட்டும். அவரிடம் எடுத்துக் கூறப்பட்ட விஷயத்தைக் கவனிப்போம்.

1. தீண்டாமையைச் சட்ட விரோத மாக்கவேண்டும்.
2. பழங்குடி மக்களுக்கு சமூக உரிமைகள் தடுக்கப் படக்கூடாது.
3. கோயில் நுழைவு, விரைவாக்கப் படவேண்டும், சட்டமூலமாகவும், பிரசார மூலமாகவும்.
4. பழங்குடி மக்களின்முன்னேற்றத்தைக் கவனிக்கத் தனி இலாக்காஒரு ஐ. சி. எஸ். ஆபீசர் மேற்பார்வையில் அமைக்கப்படவேண்டும்.
5. கோயில் நிலங்களை, அரிஜனங்களுக்குக் குத்தகைக்கு விடவேண்டும்.
6. சேரிகளைச் சீர்திருத்த ஒரு ஐந்து வருஷத் திட்டம் வேண்டும்.
7. உத்யோகங்களில் 12-உத்யோகஸ்தர்கள் நியமிக்கப் பட்டால்,அதிலே இரண்டு பேராவது அரிஜனங்களாக இருக்கவேண்டும்.

பேட்டி கண்டுமகஜர் கொடுத்த ஆதி ஆந்திரர்கள், ஆந்திர கேசரியிடம் அறிவித்துக் கொண்ட விஷயம் இவை.

இவைகள் அவசியமானவை என்பதையும்பிரகாசம்காருஅறிவார், ஆயிரமாயிரம் மேடைகளிலே இவைபற்றிப் பேசி இருக்கிறார், இவைகளை நிறைவேற்றுவதற்காக, அதிகாரவர்க்கத்தின் ஆணிவேர் அறுபடும் அளவு கசையடி கொடுத்திருக்கிறார்; ஆனால் அப்படிப்பட்டவர் ஆளும்போது, பேட்டி கண்டு மகஜர் சமர்ப்பிக்க வேண்டி இருக்கிறது நிலைமை!! எவ்வளவு வெட்கக்கேடு, எவ்வளவு வேதனை!!

பொதுமக்களிடம் என்னென்ன ஆசை வார்த்தை கூறினோம் என்பதை மறந்து, ஆட்சிக்கு வந்ததும், வருவதற்கு முன் கொடுத்த வாக்குறுதிகளை அலட்சியம் செய்து முதலமைச்சர் இருக்கிறார், என்பதனாலேதான், அவரைப் பேட்டி கண்டு, மகஜர் தரவேண்டி இருந்தது. மக்கள் சர்க்காரின் போக்கு இப்படியா இருப்பது!

நாட்டின் நிலைமை, மக்களின் கஷ்டம், பழங்குடி மக்களின் பரிதாப நிலைமை. இவைகளை, நாடாள வந்திருக்கும் பிரகாசம் காருவுக்குப் பேட்டிகண்டு தெரிவிக்க வேண்டி இருக்கிறது. இந்த நாள் வருமென்று தேர்தல் திருநாள் கொண்டாடினார்கள்?

கோயில் நுழைவு சம்பந்தமாக, சட்டம் மட்டும் தேவை என்று சொல்லவில்லை, பேட்டி கண்டவர்கள்; பிரச்சாரமும் செய்யவேண்டும் என்றனர். ஏன்? அந்தப் பிரச்சாரத்தை, பவனிவரும் மந்திரிமார்கள் செய்திருந்தால், கோயில் நுழைவுக்காகப் பிரசாரம் செய்யுங்கள் என்று பேட்டி கண்டு கூறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உண்டாகி இராது. பிரச்சாரம் செய்ய பிரகாசம் மந்திரி சபைக்குத்தான் வேறு வேலை இருக்கிறதே! "பொதுஉடைமைக்காரனை நம்பாதே!" இதுதானே இப்போது பிரச்சாரம்!!

பதவிக்கு வருவதற்காக, பழங்குடி மக்கள் படும் துயரம், சேரிகளின் நாற்றம், கோயிலில் உரிமை இல்லாதிருப்பது போன்ற விஷயங்களைப் பிரசாரம் செய்யவேண்டி இருந்தது; செய்தார்கள் - பதவியும் பெற்றார்கள். இப்போது, கிடைத்த பதவிக்கு ஆட்டம் காணாதிருப்பதற்காக,"கம்யூனிஸ்டுக் கட்சியைநம்பாதே"என்றபிரச்சாரத்தில், தீவிரமாக இறங்கிவிட்டார்கள்!! கண்ணகியைக் கண்டாயிற்று, பேசியாயிற்று, கடிமணமும் புரிந்தாயிற்று, பிறகு மாதவியின் மை விழி, மையல் ஊட்டும் மொழி, இவைகள்தானே கோவலனுக்குச் சுவை தந்தது, காற்சிலம்பு விற்க மதுரைக்குக் கிளம்புகிற வரையிலே. அது போலாகி விட்டது பொதுமக்கள் சர்க்காரைநடத்தப் பயணப்பட்ட தலைவர்கள் கதையும்; அரிஜனங்கள் படும் அவதி, தொழிலாளர்

(6-ம் பக்கம் பார்க்க)

தந்தி:- "புருமார்க்" திருச்சி.


# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் :- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100-நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.








கிளி மார்க் பட்டணம் பொடி.

நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.


### திருமண அழைப்பு

காஞ்சிபுரம் தோழர்

C.V.M. அண்ணாமலை

தோழியர்

திரிசடை அம்மையாரை

11-9-46ல் காஞ்சிபுரம்ராஜகோபால் மண்டபத்தில்தோழர் அண்ணாத்துரை அவர்கள் தலைமையில் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளும் விழாவுக்கு அன்பர்கள் வரவேண்டுகிறோம்.

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.